# திக்வெல்ல பிரதேச சபை
# மாத்தறை மாவட்டம்

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2017 ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 மார்ச் 23 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வாளர் தலைமையதிபதியின் அறிக்கை 2018 ஆகஸ்ட் 31 ஆந் திகதி சபையின் தலைவருக்கு அனுப்பப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இவ்வறிக்கையின் 1.3 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்ந்து, திக்வெல்ல பிரதேச சபையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.3.1 கணக்கீட்டு குறைபாடுகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2015 ஆண்டு தொடர்பாக 2016 ஆண்டின் போது கிடைத்திருந்த ரூபா 1,022,982 தொகைக்கான மூலதன உதவிகளின் பெறுமதி மற்றும் ரூபா 1,379,276 இற்கான நிலுவை சம்பள மீளளிப்புக்கள் ஆண்டிற்கான மிகையுடன் சீராக்கல் செய்திருந்த போதிலும், அத்தொகை திரண்ட நிதியத்தில் இருந்து அகற்றப்பட்டிருந்தது.

(ஆ) கடந்த ஆண்டுகளின் போது சபை நிதியம் மற்றும் பல்வேறு ஏற்பாடுகளின் கீழ் மேற்கொண்டிருந்த நிர்மாண வேலைகள் தொடர்பாக கூட்டுப் பெறுமதி ரூபா 4,254,494 தொகை குறைவாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(இ) சபைக்குச் சொந்தமான எக்ஸ்சவேட்டர் இயந்திரம் தொடர்பாக முன்னைய ஆண்டின் போது செலவிடப்பட்டிருந்த மூலதன செலவுகள் ரூபா 207,300 தொகை குறைவாகக் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஈ) பிரதேச சபைக்கு ஒப்படைக்கப்பட்டிருந்த ரூபா 15,995,151 சீதகல்ல கடல் தடாகம் மற்றும் நன்கொடையாக கிடைத்திருந்த ரூபா 535,000 தொகைக்கான நீர்பவுஸரின் பெறுமதி என்பனவற்றை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(உ) மீளாய்வாண்டின் போது சபை நிதியம் மற்றும் பல்வேறு ஏற்பாடுகளின் கீழ் பூர்த்தி செய்திருந்த நிர்மாண வேலைகள் தொடர்பாக கூட்டுத்தொகை ரூபா 2,459,224 தொகைக்கான நிலையான சொத்துக்கள் மற்றும் கொள்வனவு செய்திருந்த கூட்டுத்தொகை ரூபா 153,565 தொகைக்கான நிலையான சொத்துக்களை மூலதனப்படுத்தியிருக்கவில்லை.

(ஊ) கூட்டுத்தொகை ரூபா 95,967 தொகைக்கான ஊழியர் பிணை வைப்புக்களின் பெறுமதியை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(எ) உள்நாட்டு கடன்கள் மற்றும் அபிவிருத்தி நிதியத்திலிருந்து பெற்றிருந்த கடன் தொகை ரூபா 4,930,120 தொகை குறைவாக ஐந்தொகையில் காட்டப்பட்டிருந்ததுடன், மீதியை நடைமுறை மற்றும் நடைமுறை அல்லாத பொறுப்புக்கள் என வெவ்வேறாக வெளிப்படுத்தியிருக்கவில்லை.

(ஏ) கடந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களில் கடன்கொடுத்தோர் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருந்து 13 நிர்மாண வேலைகளுக்காக மீளாய்வாண்டின் இறுதியிலும் ரூபா 14,638,081 இற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஐ) கடந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றில் கடன்பட்டோர் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்த 11 நிர்மாண வேலைகளுக்கு மீளாய்வாண்டு இறுதியில் மீண்டும் ரூபா 15,663,566 இற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

(ஒ) கடந்த ஆண்டின் போது பூர்த்தி செய்திருந்த 03 நிர்மாண வேலைகளுக்காக கடன் கொடுத்தோர் ஏற்பாடுகள் ரூபா 1,661,202 தொகை மற்றும் கடன்பட்டோர் ஏற்பாடுகள் ரூபா 2,986,853 தொகை மிகையாக காட்டப்பட்டிருந்தது.

(ஓ) நிலுவை வீதவரி மீதி தொடர்பாக மீளாய்வாண்டின் போது அறவீடு செய்திருந்த ரூபா 131,397 இற்கான தண்டப்பணத்தை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(ஔ) கடந்த ஆண்டின் போது சபைக்குச் சொந்தமான டிபர் வண்டியை வாடகை அடிப்படையில் கொடுத்தது தொடர்பாக அறவிடப்பட வேண்டிய ரூபா 56,810 தொகையினை கணக்கீடு செய்திருக்கவில்லை.

(க) உள்ளூராட்சி ஓய்வூதிய நிதியத்திற்கு செலுத்தப்பட வேண்டிய பங்களிப்புத் தொகை ரூபா 2,345,097 இற்காக கடன் கொடுத்தோர் ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை.

(ங) மீளாய்வாண்டு தொடர்பாக செலுத்த வேண்டிய கணக்காய்வு கட்டணத்திற்காக கடன் கொடுத்தோர் ஏற்பாடு செய்திருக்கவில்லை.

(ச) வீதி அபிவிருத்தி செய்யும் நிர்மாண வேலை ஒன்று தொடர்பாக நிர்மாண வேலை கடன்பட்டோர் மற்றும் கடன் கொடுத்தோர் ஏற்பாடுகள் ரூபா 69,181 இனால் மிகையாக காட்டப்பட்டுள்ளது.

(ஞ) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு கடன் கணக்கின் மீதி மற்றும் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் காணப்பட்ட மீதி இடையே ரூபா 569,149 இற்கான வித்தியாசத்தை இனங்காணாமல் திரண்ட நிதியத்திற்கு சீராக்கல் செய்யப்பட்டிருந்தது.

**1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கணக்குகள்**

நிதிக்கூற்றுக்கள் காணப்படுகின்ற ரூபா 397,207,953 தொகைக்கான 07 கணக்கு விடயங்கள் தொடர்பான மீதிகள் மற்றும் அதனோடு தொடர்புடைய துணைப் பதிவேடுகள் / அட்டவணைகளில் காட்டப்பட்டுள்ள மீதிகளிடையே கூட்டுத்தொகை ரூபா 261,374,970 இற்கான சமமின்மை காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது.

**1.3.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்**

**(அ) பெற வேண்டிய கணக்குகள்**

மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பல்வேறு கடன்பட்டோர் மீதி ரூபா 56,028,742 தொகையாக காணப்பட்டதுடன், அம்மீதியில் 03 வருட காலத்தை மிகைத்துள்ள ரூபா 27,328,904 இற்கான கடன்பட்டோர் மீதியும் உட்படுத்தப்பட்டிருந்தது.

**(ஆ) செலுத்த வேண்டிய கணக்குகள்**

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு நிர்மாண வேலை கடன் கொடுத்தோர் மீதி ரூபா 142,687,232 ஆக இருந்ததுடன், அம்மீதியில் 03 வருடங்களை காலத்தை மிகைத்துள்ள கூட்டுத்தொகை ரூபா 113,831,161 தொகைக்கான மீதியும் உட்படுத்தப்பட்டிருந்தது.

(ii) ரூபா 53,194 தொகைக்கான குறிப்பிட்ட வரி வைப்புக்கள் தொடர்பாக மீளாய்வாண்டின் போதும் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**1.3.4 கணக்காய்விற்கான எழுத்துமூல சான்றுகள் இன்மை**

தேவையான தகவல்கள் சமர்பிக்கப்படாமையால் கூட்டுத்தொகை ரூபா 559,723,679 தொகைக்கான 07 கணக்கு விடயங்களை கணக்காய்வின் போது திருப்திகரமாக மெய்மையாக்க முடியாதுள்ளது.

**1.3.5 இணக்கமின்மைகள்**

**1.3.5.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத தீர்மானங்களுடன் இணக்கமின்மை**

சட்டங்கள், விதிகள் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் ஏற்பாடுகளுக்கு இணக்கமின்மைச் சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் தொடர்பு | இணக்கமின்மை |
|---|---|
| (அ) 1988 பிரதேச சபை (நிதி மற்றும் நிருவாக) விதி | |
| (i) விதி 143 | திருப்பிச் செலுத்த வேண்டிய வைப்புப் பேரேடு மாதாந்தம் கூட்டி மீதிகளின் கூட்டுத்தொகை பிரதான பேரேட்டு கணக்குடன் சீராக்கல் செய்திருக்கவில்லை. |
| (ii) விதி 164 | சபையின் கணக்கு ஆவணங்கள் செயலாளர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட உத்தியோகத்தர் ஒருவரினால் நாளாந்தம் பரிசோதனை செய்யப்பட்டு அதற்காக சுருக்கக் கையொப்பம் இடப்பட்டு உறுதிப்படுத் தியிருக்கவில்லை. |

| | | |
|---|---|---|
| (ஆ) | 2015 ஜுலை 10 திகதிய 2/2015 இலக்கங் கொண்ட பொதுநிதிச் சுற்றறிக்கை | பாவனையில் இருந்து அகற்றப்பட்டிருந்த ரூபா 2,350,000 கிரயத்திற்கான 03 வாகனங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (இ) | நகர அபிவிருத்தி அதிகார சபையினால் வெளியிடப்பட்ட 1992 பெப்ரவரி 26 திகதிய 05/01/119/சix இலக்கம் கொண்ட அறிவுரைக் கடிதம் | திட்டக் குழுவின் கொடுப்பனவை செலுத்துவதற்காக 02 மணித்தியாளத்தை விட கூடுதலான காலம் கடமை நேரத்திற்கு வெளியே செயற்பட வேண்டுமெனினும், அதற்கு பொருத்தமற்ற முறையில் ரூபா 288,000 தொகையொன்று 2017 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு செலுத்தப்பட்டிருந்தது. |
| (ஈ) | தென்மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2016 திசெம்பர் 31 திகதிய தபச/சங்/01/01/53 இலக்கம் கொண்ட அறிவுரைக் கடிதம் | சுற்றுநிருப அறிவுரைகளுக்கு இணக்கமின்றி ரூபா 8,723,757 தொகைக்கான 13 நிர்மாண வேலைகள் வேறு ஒப்பந்தக்காரர்களின் மூலம் நிறைவேற்றப்பட்டிருந்தது. |

## 2 நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுகளின் பிரகாரம் 2017 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டின் போது சபையின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 22,632,502 தொகையாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொப்ப முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவை விஞ்சிய வருமானம் ரூபா 21,068,210 ஆகக் காணப்பட்டது.

## 2.2 வருமான நிருவாகம்

### 2.2.1 மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டு தொடர்பாக சமர்ப்பித்திருந்த மதிப்பீட்டு வருமானம், சிட்டையிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பாக தகவல்கள் கீழே காணப்படுகின்றன.

| வருமான மூலம் | 2017 | | | | 2016 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை | மதிப்பீட்டு வருமானம் | சிட்டையிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மொத்த நிலுவை |
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 3,697,123 | 5,805,656 | 5,966,523 | 2,498,500 | 4,404,905 | 4,455,407 | 3,455,618 | 2,659,367 |
| வாடகை | 4,996,100 | 4,688,694 | 4,566,433 | 1,783,182 | 5,457,700 | 4,860,777 | 4,638,330 | 1,660,921 |
| அனுமதிப்பத்திர கட்டணம் | 1,136,000 | 1,292,591 | 1,292,591 | - | 857,500 | 1,204,829 | 1,204,829 | - |
| ஏனைய வருமானங்கள் | 31,414,735 | 33,870,641 | 11,245,403 | 69,254,288 | 19,857,343 | 29,114,283 | 15,279,491 | 46,629,050 |
| மொத்தம் | 41,243,958 | 45,657,582 | 23,070,950 | 73,535,970 | 30,577,448 | 39,635,296 | 24,568,268 | 50,949,338 |

### 2.2.2 வருமானம் சேகரித்தல் செயலாற்றுகை

மீளாய்வாண்டின் போது மதிப்பீடு செய்யப்பட்ட மொத்த வருமானம் ரூபா 41,243,958 தொகையாகக் காணப்பட்டதுடன், சிட்டை இடப்பட்ட வருமானம் ரூபா 45,657,582 ஆக காணப்பட்டது. ரூபா 50,949,338 தொகையாகக் காணப்பட்ட ஆரம்ப நிலுவையுடன் அறவிடப்பட வேண்டிய மொத்தத் தொகை ரூபா 96,606,920 தொகை எனினும், ஆண்டின் போது சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் ரூபா 23,070,950 தொகையாக இருந்தமையால் வருட இறுதியில் உள்ளவாறு மொத்த நிலுவை ரூபா 73,535,970 ஆக காணப்பட்டது.

### 2.2.3 வீதவரியும் வரியும்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

**(அ) வீதவரி**

ஆரம்ப நிலுவை மீதி ரூபா 2,894,613 தொகையாக காணப்பட்டதுடன், ரூபா 3,449,234 தொகையான ஆண்டிற்கான சிட்டையிடலுடன் ரூபா 6,343,847 தொகை அகற்றப்படவேண்டியிருந்தது. மொத்த அறவீடுகள் ரூபா 3,582,335 தொகையாக காணப்பட்டமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 2,632,926 இற்கான நிலுவை மீதி ஒன்று காணப்பட்டது.

**(ஆ) ஏக்கர் வரி**

ஆரம்ப நிலுவை மீதி ரூபா 51,348 தொகையாக காணப்பட்டதுடன், ஆண்டிற்கான சிட்டையிடல் ரூபா 6,902 தொகையாக காணப்பட்டது. மீளாய்வாண்டின் போது மொத்த அறவீடுகள் ரூபா 4,308 தொகையாக காணப்படாமையால் வருட இறுதியில் உள்ளவாறு ரூபா 53,942 தொகை நிலுவையாகக் காணப்பட்டது.

### 2.2.4 வாடகை

ஆரம்ப நிலுவை கடை வாடகை மீதி ரூபா 1,658,921 தொகையாக காணப்பட்டதுடன், ரூபா 2,385,302 தொகையான சிட்டை இடல் உடன் ரூபா 4,044,223 தொகை அறவிடப்பட வேண்டியிருந்தது. மொத்த அறவீடுகள் ரூபா 2,571,436 ஆகக் காணப்படாமையினால் வருட இறுதியில் உள்ளவாறு நிலுவை ரூபா 1,472,787 தொகை நிலுவையாகக் காணப்பட்டது.

### 2.2.5 அனுமதிப்பத்திரக் கட்டணம்

சபையின் 2011 ஆண்டு முதல் 2017 ஆண்டு வரை 11 வர்த்தக நிறுவனங்களில் இருந்து அறவிடப்பட வேண்டிய ரூபா 43,000 இற்கான வர்த்தக அனுமதிப்பத்திரக் கட்டனம் அறவீடு செய்திருக்கவில்லை.

### 2.2.6 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

மாகாண சபையின் பிரதான செயலாளரிடம் மற்றும் ஏனைய அதிகாரிகளிடம் மீளாய்வாண்டு இறுதியில் உள்ளவாறு பெற வேண்டியிருந்த நீதிமன்றத் தண்டப்பணம் ரூபா 1,948,198 தொகை மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 67,306,090 தொகை ஆகும்.

## 3 செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றுகை

பிரதேச சபை கட்டளைச் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் கீழ் மக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டு சேவை மற்றும் பொது பாதைகள் மீதான கருமங்களை முறைப்படுத்தலும் கட்டுப்படுத்துதலும் பொதுமக்களின் சுகபோக வாழ்க்கை, வசதிகள் மற்றும் நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த செய்பணிகளை நிறைவேற்றுவது தொடர்பாக கண்டுபிடிக்கப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

#### (அ) திண்மக் கழிவுப்பொருள் முகாமைத்துவம்

மீளாய்வாண்டின் போது திண்ம கழிவுப் பொருள் முகாமைத்துவத்திற்காக ரூபா 11,686,788 இற்கான செலவு ஒன்று செய்யப்பட்டிருந்தது. ஆண்டின் போது 514,434 கிலோ கிராம் குப்பைகள் சேமிக்கப்பட்டிருந்ததுடன், குப்பை சேகரிப்பதன் மூலம் கிடைத்திருந்த வருமானம் ரூபா 1,123,600 தொகை ஆகும். உக்கக்கூடிய குப்பைகளை மீழ்சுழற்சி செய்வதற்காக மற்றும் உயிர்வாயு அலகிற்கு பயன்படுத்தி, உக்காத குப்பைகள் தனியார் காணி ஒன்றில் போடப்படுகின்றது. இதற்காக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் ஒன்று பெற்றிருக்கவில்லை. உயிர்வாயு அலகு செயற்படாது காணப்பட்டது.

#### (ஆ) சுற்றாடல்சார் சிக்கல்கள்

1980 இன் 47 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் சட்டத்தின் பிரகாரம் வெளியிடப்பட்ட 1533/16 மற்றும் 2008 ஜனவரி 25 ஆம் திகதிய வர்த்தமானி அறிவித்தலின் பிரகாரம் அனுமதிப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ள வேண்டிய 66 வியாபார நிலையங்களினால் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளமையால் சபை ரூபா 290,400 இற்கான வருமானம் ஒன்றினை இழந்துள்ளது. மேலும், அதன் மூலம் ஏற்படுகின்ற சுற்றாடல் சேதங்கள் தொடர்பாக சபை கவனம் செலுத்தியிருக்கவில்லை.

#### (இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு

நிலைபேறான அபிவிருத்திக்காக 2030 நிகழ்ச்சி நிரலில், நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளுக்காக உலகலாவிய சுட்டிகளின் மூலம் சபையின் அதிகாரப் பிரதேசத்திலுள்ள பொது மக்களின் வாழ்க்கை தரம் மற்றும் சுகாதாரத்தை மேம்படுத்துவதற்காக சபையினால் நிலைபேறான அபிவிருத்தி குறிக்கோள்கள் மற்றும் இலக்குகளை இனங்கண்டிருந்தது. நிலைபேறான அபிவிருத்தி மற்றம் இலக்குகளை அளவீடு செய்வதற்காக சுட்டிகளை இனங்கண்டிருக்காததுடன், தேவையான நிதி ஏற்பாடுகள் சபையினால் இனங்கண்டிருக்கவில்லை. நிலைபேறான அபிவிருத்தி இலக்குகளை நெருங்குதல் சபையில் தற்போது காணப்படும் பௌதீக வளங்களின் முகாமைத்துவத்திற்காக செய்முறை ஒன்று மற்றும் பதவியணியினருக்கு பயிற்சி வழங்குவதற்கான செய்முறை ஒன்று மற்றும் தேவையான வளங்கள் மற்றும் கொள்திறன்களை இடையறாமல் பெற்றுக்கொள்வதற்கு இயலாமையினால் ஆபத்தினை இனங்கண்டிருக்கவில்லை.

### 3.2 முகாமைத்துவ திறமையின்மை

கடந்த ஆண்டின் போது மாத்தறை கதிர்காமம் புகையிரத பாதை செயற்திட்டத்திற்கான வாடகை அடிப்படையில் டிபர் வண்டி ஒன்று வழங்கியிருந்ததுடன், அதன் மூலம் அறவிடப்பட வேண்டிய ரூபா 56,810 இற்கான தொகை 2017 திசெம்பர் 31 திகதி அளவிலும் அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

### (அ) ஊழியர் வெற்றிடங்களும் மிகைகளும்

இது தொடர்பாக, பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) அங்கீகரிக்கப்பட்ட ஊழியர்கள் எண்ணிக்கையை மிகைத்து 16 ஊழியர்கள் சேர்க்கப்பட்டிருந்ததுடன், ஊழியர் வெற்றிடங்கள் 02 காணப்பட்டது.

(ii) திறைசேரி செயலாளரின் 2014 மார்ச் 31 திகதி மற்றும் 03/2014 ஆம் இலக்க முகாமைத்துவ சேவை சுற்றறிக்கைக்கு இணக்கமின்றி சேர்க்கப்பட்டிருந்த 15 ஊழியர்களுக்காக 2014 ஆண்டு முதல் ரூபா 6,400,866 இற்கான தொகையொன்று சம்பளமாக சபை நிதியத்தில் இருந்து செலுத்தப்பட்டிருந்தது. அவற்றில் 2017 ஆண்டில் மாத்திரம் ரூபா 3,058,834 தொகையொன்று செலுத்தப்பட்டிருந்தது.

### (ஆ) பதவியணிக் கடன்

சபையின் ஊழியர் கடன் பதிவேட்டின் பிரகாரம் தவணைக் கொடுப்பனவுகளை செலுத்துவதை புறக்கணித்துள்ள ஊழியர்களிடன் அறவிடப்பட வேண்டிய ரூபா 381,136 இற்கான நிலுவை கடன் மீதியை அறவீடு செய்வதற்கு மீளாய்வாண்டு இறுதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 3.4 செயற்பாட்டு திறமையின்மை

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் போது 3,000 விடக் கூடிய எண்ணிக்கையான வீதி விளக்குகளை பராமரிப்பதற்காக ரூபா 607,893 இற்கான தொகையொன்று செலவிடப்பட்டிருந்ததுடன், அங்கீகரிக்கப்பட்டிருந்த வீதி விளக்குகளின் எண்ணிக்கை 308 ஐ மிகைத்து வீதி விளக்குகள் பொருத்தப்பட்டிருந்தமையால் சபை நிதியத்தில் இருந்து ரூபா 523,813 இற்கான தொகையொன்று பராமரிப்பு விடயங்களுக்காக செலவிடுவதற்கு நேரிட்டிருந்தது.

(ஆ) கரதகொட கீனகஹஹேன கிரிமெடி வத்த என்ற காணியை ஏலவிற்பனவில் விற்பனை செய்த போது சபைக்கு கிடைக்க வேண்டிய 2 ரூட் 0.32 பர்சஸ் காணிப் பகுதியொன்று குறைவாக பெற்றிருந்ததுடன், காணி தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட பௌதீக பரிசோதனையின் போது சபைக்கு சொந்தமான காணிப்பகுதியை இனங்காண்பதற்கும் முடியாதிருந்தது.

## 3.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.5.1 விளைவற்ற / குறைபயன்படு சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சபைக்குச் சொந்தமான ரூபா 2,000,000 இற்கான லொறி ஒன்று 2014 செப்டம்பர் 16 திகதி முதலும், ரூபா 350,000 தொகைக்கான டெய்லர் மற்றும் பெறுமதிகள் குறிப்பிடப்படாத மேலும் மோட்டார் சைக்கிள் ஒன்றும் 2016 திசெம்பர் 09 திகதி முதல் செயற்படாமல் காணப்பட்டது.

(ஆ) 2011 நவம்பர் 30 திகதி கொள்வனவு செய்திருந்த பெக்கோ இயந்திரம் 2017 திசெம்பர் 31 திகதி அளவில் 147.5 இயந்திர மணித்தியாளங்கள் மாத்திரம் வாடகை அடிப்படையிலும் சபையின் அலுவல்களுக்கும் ஈடுபடுத்தப்பட்டிருந்தது. மீளாய்வாண்டின் போது ரூபா 166,860 இற்கான வருமானம் ஒன்று உழைத்திருந்த போதிலும், ரூபா 1,580,983 இற்கான திருத்த வேலை மற்றும் எரிபொருள் செலவுகள் மேற்கொள்ளப்பட்டிருந்தது.

**3.6 ஒப்பந்த வேலை நிருவாகம்**

---

மீளாய்வாண்டிற்கான பாதீட்டின் பிரகாரம் பல்வேறு ஏற்பாடுகளின் கீழ் ரூபா 4,000,000 தொகைக்கான 08 வேலைத்திட்டங்கள் செயற்படுத்தப்பட்டிருந்ததுடன், பாதீட்டின் கீழ் ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டிருக்காத ரூபா 12,967,091 தொகைக்கான 11 நிர்மாண வேலைகள் பல்வேறு ஏற்பாடுகளின் கீழ் நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**4 கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்**

---

**4.1 பாதீட்டுக் கட்டுப்பாடு**

---

மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மற்றும் உள்ளவாறான வருமானம் மற்றும் செலவுகளிடையே கீழே விபரிக்கப்பட்டுள்ளவாறு கணிசமான முரண்கள் அவதானிக்கப்பட்டமையால், பாதீடு ஆக்கபூர்வமான நிதி முகாமைத்துவ கட்டுப்பாட்டுக் கருவி ஒன்றாக பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

(அ) 06 செலவு விடயங்களில் கூட்டுத்தொகை ரூபா 20,671,431 தொகைக்கான சேமிப்பு காணப்பட்டதுடன், அப்பெறுமதி 18 சதவீதம் முதல் 57 வரையான வீச்சில் காணப்பட்டது.

(ஆ) மேலும் 02 செலவு விடயங்களில் பிரதிகூலமான முரண்கள் கூட்டுத்தொகை ரூபா 1,029,160 தொகை ஆக காணப்பட்டதுடன், அப்பெறுமதி 03 சதவீதம் முதல் 1913 சதவீதத்துக்கு இடைப்பட்ட வீச்சில் காணப்பட்டது.

(இ) 03 வருமான விடயங்களின் பிரதிகூலமான முரண்களின் கூட்டுத்தொகை ரூபா 2,982,075 தொகையாக காணப்பட்டதுடன், அப்பெறுமதி 06 சதவீதம் முதல் 19 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது.

**4.2 உள்ளக கணக்காய்வு**

---

இலங்கை குடியரசின் நிதிப்பிரமாணம் 133 மற்றும் 134 இல் காட்டப்பட்டுள்ள ஏற்பாடுகள் மற்றும் தென் மாகாண உள்ளூராட்சி ஆணையாளரின் 2014 பெப்ரவரி 24 திகதிய தபபா/யஹ/01/ந.ச.லே இலக்கம் கொண்ட சுற்றறிக்கையின் பிரகாரம் போதியளவு உள்ளகக் கணக்காய்வு ஒன்று மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. நிதிப்பிரமாணம் 134 இன் பிரகாரம் உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித் திட்டம் தயாரிக்கும் போது கணக்காய்வாளர் தலைமை அதிபதியுடன் கலந்துரையாடி இருந்ததுடன், உள்ளகக் கணக்காய்வு அறிக்கைளின் பிரதிகள் கணக்காய்விற்கு சமர்ப்பிப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

**4.3 தீர்க்கப்பட்டிருக்காத அவதானிப்புக்கள் மற்றும் பதில் அளிக்கப்படாத கணக்காய்வு ஐய வினாக்கள்**

---

பின்வரும் கணக்காய்வு ஐயவினாக்கள் தொடர்பாக 2017 திசெம்பர் 31 திகதி வரை உரிய நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(அ) குப்பைகள் சேகரிப்பதற்காக 2012 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரை கிடைத்திருந்த ரூபா 2,566,550 தொகையில் ரூபா 861,434 இற்கான தொகை ஒன்று கமிஷன் ஆக சபையின் சுகாதார தொழிலாளர்களுக்கு செலுத்தப்பட்டிருந்தது.

(ஆ) சபைக்குச் சொந்தமான தகனசாலை ஒன்று நிர்மாணித்தல் தொடர்பாக வழக்கு ஒன்றினை இனக்கத்தை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்காமல், தொடர்ந்து அந்த வழக்கு நடைபெறுவதினால் 2010 ஆண்டு முதல் 2016 ஆண்டு வரை வழக்குக் கட்டணங்கள் ரூபா 427,500 இற்கான தொகையொன்று சபை நிதியத்திலிருந்து செலவிட நேரிட்டிருந்தது.

(இ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபை சட்டதத்தின் பிரிவு 149 இன் பிரகாரம் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையில் பதிவு செய்யப்பட்டுள்ள 07 ஹோட்டல்களில் இருந்து வரி அறவீடு செய்திருக்கவில்லை. அவ்வாறு வரி அறவீடு செய்யாமையால் 03 ஹோட்டல்களில் இருந்து மாத்திரம் சபை ரூபா 1,535,860 இற்கான வருமானம் ஒன்றினை இழந்துள்ளது.

(ஈ) சபைக்குச் சொந்தமான சந்தை வளவில் உயிர்வாயு அலகு ஒன்று நிர்மாணிப்பதற்காக மேற்கொள்ளப்பட்டிருந்த ரூபா 1,010,712 இற்கான செலவு பலனற்ற செலவு ஒன்று ஆகியுள்ளது.

**5 முறைமைகள் மற்றும் கட்டுபாடுகள்**

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட குறைபாடுகள் அவ்வப்போது சபையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதுடன், பின்வரும் கட்டுபாட்டுப் பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தப்பட வேண்டும்.

(அ) நிலையான சொத்துக்கள்
(ஆ) வருமானம் சேகரித்தல்
(இ) பாதீட்டுக் கட்டுப்பாடு
(ஈ) கணக்கீடு